[1990 மார்ச் 29]

ஒரு நல்ல வாய்ப்பும் வசதியும் இருப்பதனாலும் ஏராளமான உழைப்பாளி மக்களுக்கு வேலை கிடைக்கின்ற வாய்ப்பு இருப்பதனாலும், திட்டக் குழுவே இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு இருப்பதனாலும்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வேகமாக, கொஞ்சம் சுறுசுறுப்பாக கேள்வி கேட்க வேண்டும்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : ஆகவே, இந்த மாபெரும் திட்டத்தை தமிழக அரசு துரிதப்படுத்தி முடிப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : அரசு இதைப் பற்றி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. விரைவில் அப்படிப்பட்ட ஒரு தொழில் அமைப்பதற்கு அரசு முன்வரும். இந்தத் துறையிலே ஏற்கெனவே சில தனியார் நிறுவனங்கள் நல்ல முறையில் தங்கள் தொழிற்கூடங்களை அமைத்து, தோல் பொருள்கள் ஏராளமாக ஏற்றுமதி ஆகிக் கொண்டிருக்கிறது. எனவே அரசின் மூலமாகத்தான் இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற நிலையில் இன்றைக்கு நாம் இல்லை. இந்தத் துறையில் ஈடுபட வருகின்ற தனியார் தொழில் அதிபர்களுக்கு மற்றும் மின்னணு தொழில்களை மேற்கொள்ள வருகிற சிறு தொழில் அதிபர்களுக்கு ஏற்கெனவே அரசு 20 சதவிகித மானியம் வழங்கும் என்று ஏற்கெனவே தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அரசு இத்திட்டம் பற்றியும் பரிசீலிக்கும்.

இண்டி தொழிற்பேட்டையில் மேலும் தொழிற்கூடங்கள் கட்டுதல்.

*8158—திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சைதை தொகுதியிலுள்ள கிண்டி தொழிற்பேட்டையில் மேலும் தொழிற்கூடங்கள் கட்டப்படும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சைதையிலுள்ள கிண்டி தொழிற் பேட்டையில் மேற்கொண்டு தொழிற்கூடங்கள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவரவர்களே, சைதை தொகுதி கிண்டி திரு.வி.க. தொழிற் பேட்டை அருகில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி கழகத்திற்குச் சொந்தமான நிலங்கள் அதிக அளவிலே உள்ளன. இவை காலியாக இருப்பதால் பல்வகை ஆக்கிரமிப்புகள், மற்றும் மணல் எடுப்பது போன்ற காரியங்கள் நடைபெறுகின்றன. இவற்றைத் தடுத்து நிறுத்தி அந்த இடங்களில் சிறிய அளவிலாவது 400 அல்லது 500 சதுர அடி அளவிலாவது தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டு தொழில் வளத்தைப்பெருக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : திரு.வி.க. தொழிற்கூடங்களுக்கு ஏறத்தாழ 404 ஏக்கர் நிலப்பரப்பில் 389 தொழிற்கூடங்கள் ஏற்கெனவே கட்டப்பட்டு அந்தத் தொழிற்கூடங்கள் நடைபெற்று வருகின்றன. கூடுதலாகதொழிற் கூடங்கள் கட்டுவதற்கான நிலம் இல்லை என்று செயற்குறிப்பில் எனக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இடம் அங்கே காலியாக இருக்கிறது என்று உறுப்பினர் உறுதியாகக் கருதுவார்களேயானால் இடத்தைப் பார்வையிட்டு அந்தக் காலி நிலங்கள் அரசுக்குச் சொந்தமானவை என்பது உறுதி செய்யப்படுமேயானால் தொழிற்கூடங்கள் கட்டுவதற்கான பரிசீலனையை இந்த அரசு மேற்கொள்ளும்.

திரு. ஆர் எஸ் ஸ்ரீதர் : கழகத் தலைவர் கலைஞர் அவர்களுடைய காலத்தில்—தமிழக முதல்வராக இருந்த காலத்தில் கிண்டி திரு.வி.க. தொழிற் பேட்டைக்கு அருகில் 15 ஏக்கர் நிலத்தை இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனத்திற்குத் தந்தார்கள். ஆனால் இன்றுவரை அந்தக் குடியிருப்பு கட்டாமல் காலியாகவே உள்ளது. அதனால் அந்த நிலத்தைப் பலர் ஆக்கிரமிக்க முயற்சி செய்கிறார்கள். எனவே, அந்த நிலத்தைத் திரும்பப் பெற்று சிறிய சிறிய தொழிற்கூடங்கள் அமைத்துத் தர முடியுமா என்பதை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : அரசு இதைப் பற்றிப் பரிசீலனை செய்யும்.

1990 மார்ச் 29]

திரு. டி. பொன்முடி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கிண்டி தொழிற்பேட்டையில் சிறு தொழில்களை நடத்திக்கொண்டிருக்கிற தொழிலதிபர்களை ஊக்கப்படுத்துகின்ற வகையில் அந்தத் தொழிற்கூடங்களுக்கு அருகாமையில் காலியாக இருக்கிற இடங்களை அந்தத்தொழிலை விரிவு செய்கின்ற வகையில் இடம் கேட்டால் அரசு கொடுக்கத் தயாராக இருக்கிறதா என்பதை அறிய நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் ; தொழிற்கூடங்களுக்கு அருகில் காலியான இடங்கள் இருக்குமேயானால் சம்பந்தப்பட்ட தொழிலதிபர்கள் அந்த நிலம் வேண்டுமென்று விண்ணப்பம் செய்தால் அரசு பரிசீலித்து அவர்களுக்கு அந்த நிலங்களைத் தற்பொழுது ஒதுக்கிக்கொண்டிருக்கிறது. மேலும் நிலம் ஒதுக்குவதற்கான விண்ணப்பங்கள் வந்தால் அரசு அதைப் பரிசீலிக்கும்.

திரு. சி. சண்முகம் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கிண்டி தொழிற்பேட்டையில் முன்பு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த காலத்திலே ஒரு பெருத்த அளவிலே இடத்தை இந்த இண்டஸ்டிரியல் எஸ்டேட்டுக்காக ஒதுக்கப்பட்டு ஆக்கிரமிப்பு செய்து நோட்டிபிகேஷன் போடப்பட்டுள்ளது. ஆனால் இது வரையில் அதில் பெரும்பகுதியை ஆக்கிரமிப்புசெய்து வீடுகள் பிளான் இல்லாமல் கட்டப்படுகிறதை பார்த்து, அரசு நடவடிக்கையெடுத்து அதனை தொழில் பேட்டைக்கு ஒதுக்கித் தர அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

10-10 மணி.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, மூலக்கேள்வி கிண்டி தொழிற்பேட்டையில் கூடுதல் தொழில் கூடங்கள் கட்டப்படுமா என்பதைப் பற்றியதாகும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக்கேள்வி போடுவார்களேயானால் இது குறித்து விரிவான விளக்கத்தைத் தர இயலும்.

குடிநீர் தட்டுப்பாடு.

* 392—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊத்தங்கரை வட்டம், ஊத்தங்கரை பேரூராட்சிக்குட்பட்ட சிலோன் காலனி மக்களின் குடிநீர் பஞ்சத்தை போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?